**நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா பாடநெறிக்கான**

**விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.**

**புத்தசாசனம், சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் டவர் மண்டப அரங்க மன்றத்தின் டவர் நாடக பாடசாலை ஊடாக நடத்திவருகின்ற நாடக அரங்கியல் இரு வருட முழு நேர உயர் டிப்ளோமா பாடநெறிக்கான 2024/2025 கல்வி வருடத்திற்காக மாணவர்களை** உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் கோறப்படுகின்றன.

இப்பாட நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் பின்வரும் தகைமைகளை தம்மகத்தே பெற்றிருக்கவேண்டும்.

- க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு தமிழ், கணிதம், ஆங்கிலம், அழகியல் ஆகிய பாடங்கள் அடங்கலாக 06 பாடங்களில் கட்டாயம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலும் க.பொ.த (உ.த) பரீட்சையயில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஒரே தடவையில் (03) பாடங்களிலும் ஏதாவது ஒரு பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- திருமணமாகாத 19-25 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்கும் அனைவரும் டவர் மண்டப அரங்க மன்றம் நடத்தும் நாடகமும் அரங்கியலும் சார் பரீட்சை பங்கு பற்றி சித்தியடைந்து அதன் பின் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத்தேர்வின் மூலம் புள்ளிகளின் அடிப்படையில் சிறந்த தகுதியான 60 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா (2வருடம்) க்கான முழுத்தொகை 130000.00 ஆகும். (இத்தொகை சில சந்தர்ப்பத்தில் 15.4 சதவீதத்தினால் உயர்த்தப்படும்). இத்தொகையினை 4 தவணைகள் மூலம் பணம் செலுத்தலாம். விண்ணப்பப்படிவம் சம்பந்தமான தகவல்களை டவர் மண்டப அரங்க மன்ற இனையத்தளமான **www.towerhall.lk** பார்வையிடலாம்.

விண்ணப்பக் கட்டடணமாக 2000.00 விண்ணப்பத்தாரியின் ஊடாக - ஹயிற்பார்க் (Bank of Ceylon - Hyde Park) **இலங்கை வங்கிக் கிளைக் கணக்கு இலக்கம் 2327541, டவர் மண்டப அரங்க மன்றம்** - என்னும் பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பப் படிவங்களும் 15.02.2024 ஆம் திகதிக்கு முன்பாக பதிவுத்தபாலில் **பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சவ்சிறிபாய, 123, விஜேராம மாவத்தை கொழும்பு - 07** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா பாடநெறி - 2024 தமிழ்மொழி"** எனக் குறிப்பிடல் வேண்டும். மேலதிக தொடர்புகளுக்கு பிரதிப்பணிப்பாளர் தமிழ் நாடக அபிவிருத்திப் பிரிவு கலாநிதி சண்முகசர்மா ஜெயப்பிரகாஷுடன் தொடர்பு கொள்ளவும் **011-2682134, 0777911425**